1977 ஜூலை 29]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, சில கேள்விகள், சில சங்கடங்களை உண்டாக்கிவிடுகின்றன என்பதைச் சொல்லியாக வேண்டும். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் 31—3—1977-இல் முடிந்தபிறகு ஒப்பந்தம் செக்ஷன் 19(2) ஆப் தி இன்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட், தொழில் தகராறுகள் சட்டத்தின் 19(2)-வது விதியின்கீழ் 60 நாட்கள் நோட்டீஸ் கொடுத்திருக்கவேண்டும். "Settlement will stand terminated after the expiry of sixty days." என்று தொழில் தகராறுகள் சட்டம் 19(2)வது விதியின் பிரகாரம் கொடுத்து அதன் பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவது மரபு. ஆனால் இங்கே 31—3—1977 முடிந்தவுடனே மறுநாளே 1—4—1977 அன்றே கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் நடந்திருக்கின்றன. அது மட்டுமல்ல, 14 நாட்கள் நோட்டீஸ் வேலை நிறுத்தம் செய்வதாகக் கொடுத்து, அதற்கு முன்னதாகவே வேலை நிறுத்தம் நடந்திருக்கிறது. இந்தப் பிரச்சினையில் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்படாமல் எவ்வளவு சுமுகமாக முடிக்கவேண்டுமோ அந்த அளவிற்கு முடிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத்தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன,

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.

2. அறிவிப்பு.

(1) தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (எண் 2/1977).

(2) 1977-ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் நகராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (எண் 3/77).

(3) தமிழ்நாடு 1977 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (பதவிக்கால நீட்டிப்பு) திருத்தத் சட்ட முன்வடிவு (எண் 4/77).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/77), 1977-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் ஊராட்சி மன்றம் (தனி அதிகாரியை நியமித்தல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/77) மற்றும் தமிழ்நாடு 1977-ஆம் ஆண்டு ஊராட்சிகள் பதவிக்கால நீடிப்பு) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/77) ஆகியவை 27—7—1977-ஆம் தேதியன்று சட்டமன்ற மேலவை

யில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டு ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவை துணைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

3. ஒழுங்குப் பிரச்சினை

ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றியசுற்றறிக்கை குறித்து

*திரு. க. அன்பழகன்: பாயிண்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, தங்கள் அனுமதி பெற்று ஒரு விளக்கத்தைத் தங்களிடத்தில் பெறவிரும்புகிறேன். நான் சொல்வது தவருக இருக்குமானுல் தாங்கள் அதை ஏற்றுக் கொள்ளத் தேவை இல்லை. நேற்றைய தினம் இந்த அவையில் கேள்வி நேரத்திற்குப் பிறகு உரிமைப்பிரச்சினைகள் முதலிய பிரச்சினைகள் வரும்பொழுது, ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்பொழுது இந்த அவை 9 மணிக்குத் தொடங்குவதால் எட்டரை மணிக்கு முன்னதாகத் தர வேண்டுமென்பதாகச் சில விதிமுறைகளை நேற்றைய தினம் தாங்கள் படித்தீர்கள். அதைப்பற்றி எதிர்க்கட்சியைச் சார்ந்த நாங்கள் பல கருத்துக்களைத் தங்களிடத்தில் சொன்னேம். ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் சொன்னுர்கள். மறுபடியும் நேற்று இரவு தாங்கள் முதலிலே படித்த அந்த அறிக்கை அப்படியே அனுப்பப்பட்டிருக்கிறது. ஏதேனும் மாற்றம் இருக்கிறதா ? முதலிலே சொன்ன அறிக்கையிலே மாற்றம் இல்லாமல் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, தாங்கள் நேற்றைய தினம் அனுப்பியிருக்கின்ற சுற்றறிக்கையானது நமது விதிமுறைகளுக்கு முரண்பட்டதாகக் காணப்படுகிறது. காரணம் ரூல் 242-ன் கீழ் நீங்கள் நேற்றைய தினம் அனுப்பியிருக்கின்ற சுற்றறிக்கையானது அனுப்பப்பட்டிருக்கிறது. விதி 242-ஐ நான் படிக்கிறேன்.

"All matters not specially provided for in these rules and all questions relating to the detailed working of these rules unless shall be regulated in such manner as the Speaker may from time to time direct."

இங்கே,

"All matters not specially provided for in these rules.... "

அதாவது ஒத்திவைப்புத் தீர்மானமானது ரூல் 42-ன்கீழ் வருகிறது. ரூல் 42-ல் தெளிவாக எந்த நோட்டீஸ், எந்த மோஷன் கொடுக்க வேண்டும், யாரிடம் கொடுக்க வேண்டும், எப்பொழுது கொடுக்கவேண்டும் என்று ஒழுங்காகக் கூறப்பட்டிருக்கிறது.

It has been stated in clear and unambiguous terms. I will read Rules 42 and 43 also.

Rule 42 : A motion for an adjournment of the business of the Assembly for the purpose of discussing a definite matter of urgent public importance may be made in accordance with the rules in this Chapter.